**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
**ஓ.எஸ். 79 /2022**
**2026 – ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**வாதி – பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869 ம் ஆண்டு சட்ட எண். 44 வது பிரிவு 6 (1) ன் படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.பி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **ஹபீப் ரஹ்மான்** | **சாதி** | **:** | |
| **த/பெ** | **:** | | **சமயம்** | **:** | |
| **கிராமம்** | **:** | | **தொழில்** | **:** | |
| **வட்டம்** | **:** | | **வயது** | **:** | **65** |

**வா.சா. 1 ஆஜர்.**

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் 1 வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 20.03.1987 ம் தேதி தாவா சொத்தினையும் எனது தகப்பனார் மானாமதுரை சார்பதிவக ஆவண எண்.253/1987 ன் படி எழுதி கொடுத்த ஈடுகடன் பத்திரம் SRO நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. 15.09.1993 ம் தேதி தாவா சொத்தினை எனது தகப்பனார் எனது பெயருக்கு எழுதி கொடுத்துள்ள பதிவில்லா உயில் சாசனம் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

(ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

3. எனது தந்தையின இறப்பு சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. தாவா சொத்தினையும் நானும் இராஜகம்பீரம் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றதற்கான கடன் நிலுவை சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகும்.

5. எனது ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது)

(பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.)

**(வாதி தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது )**

**–Sd –**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd –**
**District Munsif,**
**Manamadurai.**